ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ்
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA
ISSN NO.2581-5938
மலர்-2, இதழ்-1, சனவரி 2019

# பண்டைத் தமிழ் வேளாளரில் இருவகையினர்

**ச. கண்மணி கணேசன்**

முன்னாள் முதல்வர், ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரி,
சிவகாசி - 626123, தமிழ்நாடு, இந்தியா

---

## முன்னுரை

பண்டை இலக்கியம் வேளிர், கிழார் என்று இருவேறு பெயர்களால் வேளாண்மை செய்பவரைச் சுட்டுகிறது. இரண்டு பெயர்களும் ஒரே இனத்தைச் சுட்டுகின்றனவா? அன்றி வெவ்வேறு இனத்தைச் சுட்டுகின்றனவா? இப்பெயர் வேறுபாட்டின் அடிப்படையாய் அமையும் காரணம் என்ன? போன்ற வினாக்களுக்கு விடைகாணும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

## வேளிர் குறித்த அடையாளப் பதிவுகள்

சங்க இலக்கியம் வேளிரைச் சுட்டும் போதெல்லாம் அவர்கள் விளைவித்த நெல் அல்லது நெல்லுடன் தொடர்புடைய கழனி, அதன் குவியல், ஏர் பரந்த வயல், நீர் பரந்த செறு ஆகியவற்றுடன் தொடர்புறுத்தியே பேசுகிறது.

***“பழம்பல் நெல்லின் வேளூர்”*** (அகநானூறு,166)

எனும் அடி பழைய நெல்லின் மிகுதியை வேளிர் ஊருடன் சேர்த்துப் பேசுகிறது.

***“கழனி காவலர் கடுநந்து உடைக்கும்***
***தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்”*** (நற்றிணை, 280)

இது வேளிரது குன்றூரின் கழனிக் காவலர்; பழன யாமையின் முதுகில் நத்தையை உடைத்து உண்டமையைக் காட்சிப்படுத்துகிறது.

***“......................... தொன்முதிர் வேளிர்***
***குப்பை நெல்லின் முத்தூறு”*** (புறநானூறு, 24)

இவ்வடி வேளிர் முத்தூற்றில் குவித்து வைத்திருந்த நெல்லைக் கண் முன்னர் கொண்டு வருகிறது.

***“ஏர்பரந்தவயல் நீர்பரந்த செறுவின்***
***நெல்மலிந்த மனை .......................***
***நெடுவேளாதன் போந்தை”*** (புறநானூறு, 338)

இப்பாடல் அடிகளில் நெடுவேள் ஆதனின் போந்தையில் ஏரால் உழுத பரந்த வயலில் நீர் நிறைந்து அடுத்தகட்ட நடவடிக்கைக்குக் காத்திருப்பதாகக் கூறுவதுடன் நெல் மிகுந்த வீடும் வருணிக்கப்பட்டுள்ளது.

## கிழார் குறித்த அடையாளப் பதிவுகள்

வேளாண்மையில் ஈடுபட்ட கிழாரைப் பாடும்போது அவரது தோட்டமும், நெல்லுக்கு மாறான புல்லின் வளமும், அதை ஈவதும் சுட்டப்படுகின்றன. பண்ணனின் படப்பையில் விளைந்த மா, நெல்லி, பாதிரிப்பூ முதலியவை பண்ணனின் சிறப்போடு சேர்த்துப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

***“கழல்கால் பண்ணன் காவிரி வடவயின்***
***நிழல் கயம் தழீஇய நெடுங்கால் மாவின்***
***தளிரேர் ஆகம்... ”*** (அகநானூறு,177)

தலைவியின் ஆகத்திற்குப் பண்ணனது மாவின் தளிர் உவமையாக எடுத்தாளப்படுகிறது.

***“பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்***
***புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்***
***நீர்குடி சுவையில் தீவிய மிழற்றி”*** (அகநானூறு, 54)

தலைவியின் சொல்லின் சுவைக்குப் பண்ணன் தோட்ட நெல்லியைத் தின்றபின் நீரருந்தும் சுவை உவமையாகிறது.

விறலியின் கூந்தல் மணத்திற்குப் பண்ணன் தோட்டத்துப் பாதிரிப்பூ மணம் உவமையாம். இதனை,
***”கைவள்ளீகைப் பண்ணன் சிறுகுடிப்***

***பாதிரி கமழும் ஓதி ஒண்ணுதல்***
***இன்னகை விறலி ...”*** (புறநானூறு, 70)

எனும் பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன. நீர்வளம் குன்றிய போதும் பண்ணன் புலவர்க்குப் புல்லின் விளைநிலத்தைக் கொடையாகக் கொடுத்ததை,

***“வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்***
***பள்ளம் வாடிய பயனில் காலை………….. ………***
***வெல்லும் வாய்மொழிப் புல்லுடை விளைநிலம்***
***பெயர்க்கும் பண்ணன் …”*** (புறநானூறு, 388)

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன. பண்ணனின் சிறுகுடி காவிரியின் வடகரையில் சோணாட்டில் இருந்ததென்றே புலவர் குறிப்பிடுவதை,

***“கழல்கால் பண்ணன் காவிரி வடவயின்”*** (அகநானூறு, 177)

என்ற பாடலடி வழி அறியமுடிகின்றது. எனவே, கிழார்கள் வாழ்ந்த இடத்திற்கும்; புன்செய்ப்பயிர் விளைவித்தமைக்கும் தொடர்பில்லை என்பது தெற்றெனப் புலப்படுகின்றது. .

***“நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்***
***புல்லுக்கும் அங்கே பொசியுமாம்...“*** (மூதுரை, 10)

எனும் பாடலில் நெல்லுக்கு மாறாகப் ‘புல்’ என்பது புன்செய்ப் பயிர்களைக் குறிக்கிறது.

பண்ணனது உழவு வினைக்குரிய எருதுகளையும், ஏற்றத்தையும் கிணைப்பறை கொட்டி இசைத்து,

***“....................பண்ணற் கேட்டிர்…………………***
***வினைப்பகடு ஏற்றம் எழீஇக் கிணைதொடா***
***நாடொறும் பாடேனாயின் ...”*** (புறநானூறு- 388)

எனப் பாடலில் சேர்த்துப் பேசியுள்ளதாகப் புலனாகின்றது.

**வேளிர், கிழார் வேறுபாடுகள்**

வேளிர் தமிழகம் போந்து ஆட்சி செய்த வேளாளர் ஆவர். கிழார் மன்னர் அல்லர்; வயலில் இறங்கி உழும் உழவர் வாழும் சிறுகுடிகளின் தலைவர் ஆவர். மு.இராகவையங்கார் ஆளும் தகுதி பெற்ற வேளிர் தமிழகம் வந்து குடியேறிய வேளாளர் என்பதை நிறுவியுள்ளார்(வேளிர் வரலாறு, பக்கம் 1-25).

கொண்கானத்தை ஆண்ட நன்னன் என்னும் வேளிர்குலத் தோன்றல் பற்றிப் பல சங்கப்பாடல்கள் உள்ளன. இருப்பினும் கொண்கானக் கிழான் நன்னனை விதந்து போற்றுவதிலிருந்து அவரிருவரும் வெவ்வேறு இனத்தினர் என்பதைக் குறிக்கிறது.

***“திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்***
***அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்***
***சின்னீர் வினவுவர் மாந்தர் அதுபோல்”*** (புறநானூறு, 154)

அரசர் அருகிலிருந்தும் உன்னை உள்ளி வந்தேன் எனும் மோசிக்கீரனாரின் பாடல் அரசரைப் போன்ற செல்வம் இல்லாதவன் கொண்கானக்கிழான் என்பதை வெளிப்படையாகச் சொல்கின்றது. கடலுக்கு அருகே இருந்தாலும் தாகம் தீர்க்க; அறிந்தோரிடம் சிறிதளவு நீர் கேட்பதைப் போல என்பதால் கிழார் வேளிரைப் போல் மன்னர் அல்லர் என்பது உறுதி.

**குறுநில மன்னராக வேளிர்**

வேளிர் ஒரெயில் கொண்ட குறுநில மன்னராகச் சுட்டப்படுகின்றனர்.

***“...............................வண்தோட்டுப்***
***பிணங்குகதிர்க் கழனி நாப்பண் ஏமுற்று***
***உணங்குகலன் ஆழியிற் தோன்றும்***
***ஒரெயில் மன்னன்“*** (புறநானூறு, 338)

இப்பாடற் பகுதி ‘அகழி, காவற்காடு இன்றி ஒரெயில் கொண்டு நெல்வயல்களின் நடுவே வேளாண்மை செய்து ஆண்ட வேளிர்’ என்று புலப்படுத்துகிறது. கடல்நடுவே மிதக்கும் கப்பலைப் போல அவனது எயிலுடன் கூடிய மனை நெற்கழனிகளுக்கு நடுவே தோற்றமளித்தது என்கிறார். வேந்தரால் போரில் தோற்கடிக்கப்பெற்ற குறுநிலமன்னர் ஒரெயிலுடன் கூடிய மனைகளில் வதிந்தமையைப் பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனாரும், (அகநானூறு, 373) உவமையாக்கியுள்ளார்.

**உழவர் சிறுகுடிகளின் தலைவராகக் கிழார்**

கிழார்கள் நெருங்கிய குறிய பல குறும்புகளில் வாழ்ந்தனர். மல்லிகிழான் காரியாதியைப் பாடும் ஆவூர்மூலங்கிழார், மல்லிக்கிழானின் வாழிடம் உற்றாரும், உறவினரும் புகுவதற்கெளிது; பகைவர்க்கு நுழைய அரிது; பொறிகள் பொருந்திய வாயிலை உடையது; அத்தகைய அளவிற் சிறிய பல குறும்புகளிடையே

ISSN NO.2581-5938
மலர்-2, இதழ்-1, சனவரி 2019

அவனது செல்வமனை இருந்தது; அவை ஒருவர்க்கொருவர் கள்ளைப் பகிர்ந்து கொள்ள ஏதுவாக அருகருகே இருந்தன (புறநானூறு, 177) என்கிறார். எனவே அவர்கள் மன்னர் அல்லர் என்பதும், அவர்கள் வயலில் இறங்கி உழும் உழவர் வாழும் சிறுகுடிகளின் தலைவர் என்பதும் புலனாகின்றது.

**வேந்தர், வேளிர், கிழார் இடையே இருந்த உறவுநிலை**

வேளிரின் நெல்வளத்தை அழித்தே வேந்தர் தம் ஆட்சியை நிலைநாட்டினர். வேளிர் வேந்தர்க்கு அஞ்சிப் பணிந்து திறை செலுத்தினர்; தம் செல்வத்தைப் பதுக்கி வைத்தனர்; மகட்கொடை மறுத்தனர்.

தம் குடும்பத்துப் பெண்களை வேந்தர் பெண்கேட்டு வருங்கால் வேளிர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. பரணர் (புறம், 343&354), கபிலர்(புறம், 337), அரிசில்கிழார் (புறம், 342), அண்டர் நெடுங்கல்லினார்(புறம்- 344 & 345), அண்டர்மகன் குறுவழுதியார் (புறம், 346), மதுரைப் படைமங்கமன்னியார் (புறம், 351). காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் (புறம், 353) முதலியோரின் பாடல்களில் இடம்பெறும் வயல்வளம்; அப்பாடலில் மகட்கொடை மறுக்கும் தலைவர்கள் வேளிர் என்பதைச் சுட்டி நிற்கின்றன.

கரிகாற்சோழன் பாண்டிய சேரருடன் பதினோரு வேளிரையும் தோற்கடித்தான் என்ற செய்தியைப் பதிவுசெய்துள்ளார்.

***"கரிகால்.......... பதினொரு வேளிரொடு வேந்தர் சாய"*** (அகம், 246)

என்கிறார் பரணர். தன் தலைநகராகக் கொண்ட உறந்தையை வெண்ணெல்லை வேலியாகக் கொண்ட தித்தனிடமிருந்து பறித்தான் (புறம், 352) என்ற செய்தியையும் அறியமுடிகின்றது.

நெடுஞ்செழியன் வேளிரைப் போரில் வென்றமையை மதுரைக்காஞ்சி,

***"இருபெரு வேந்தரொடு வேளிர் சாய .......பொலந்தார் மார்பின் நெடியோன்"***
(மதுரைக்காஞ்சி, அடிகள் 55-61)

என்னும் அடிகளால் உணர்த்துகிறது. எவ்வியின் நாட்டை நெடுஞ்செழியன் அபகரித்தமையை மாங்குடி கிழார்,

***"மாவேள்எவ்வி புனலும் புதவின் மிழலையொடு கழனி....... தந்த"*** (புறம், 24)

எனப் போற்றுகிறார்.

பதிற்றுப்பத்துச் சேரமன்னர்களான பல்யானைச் செல்கெழு குட்டுவன், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரலிரும்பொறை ஆகியோர் முன் வேளிர் நடுங்கி நின்றதைப் பல பாடல்கள் எடுத்துரைக்கின்றன. (பதிற்றுப்பத்து, 30, 45, 75, 88) பதிகங்களும்(3, 5, 8, 9) அதை உறுதி செய்கின்றன.

யானைக்கட்சேய் மாந்தரன் சேரல் இரும்பொறையைப் பாடும் குறுங்கோழியூர் கிழார்; அவன் திருவில் அல்லது கொலைவில் அறியாத; நாஞ்சில் அல்லது படையும் அறியாதவர்களின் மண்ணைக் கவர்ந்தான் என்கிறார் (புறநானூறு, 20). எனவே வானவில்லையும், ஏர்ப்படையையும் மட்டுமே போற்றிய வேளிர் அவனால் அடக்கப்பட்டமை திண்ணம்.

மிகுந்த திறைப்பொருள் கொடுத்துப் பணியத் தயாராக இருந்த வேளிரையும் வேந்தர் போரிட்டு அழித்தனர் (அகநானூறு, 84). பாரி(புறநானூறு,112), நன்னன்(பதிற்றுப்பத்து, 88), இருங்கோவேள் (பட்டினப்பாலை, 282), மூவன் (நற்றிணை,18) முதலிய வேளிர், வேந்தரால் கொல்லப்பட்டனர்.

வேந்தர் தம் ஆட்சியை நிலைப்படுத்தி நாட்டை விரிவுபடுத்த வேளிரின் விளைநிலங்களுக்கு எரியூட்டிக் கழுதை ஏர்பூட்டிக் கவடி வித்தி அவர்கள் மீண்டும் தலையெடுக்கா வண்ணம் அழித்தனர். வேளிர் அஞ்சி வாழ வேண்டிய சூழலை எயினந்தையாரின் அகப்பாடல்(நற்றிணை, 43) உவமையாகக் காட்சிப்படுத்துகின்றது. இமயவரம்பன் தன் நாட்டை விரிவுபடுத்தப் பகைநாட்டை அழித்த பாங்கினைக் குமட்டூர் கண்ணனார் விரித்துப் பாடுகிறார்.(பதிற்றுப் பத்து, 13, 15 &19).

பல வேளிர் ஒன்று சேர்ந்து தம் செல்வத்தைப் பிறர் அணுக இயலாத நன்னன் மலையின் பாழி என்ற பகுதியில் பாதுகாப்பாக வைத்து இருந்தனர். இவ்வரலாற்றுச் செய்தியை,

***"நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்***
***தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த பொன் "*** (அகநானூறு, 258)

என்று பரணர் பதிவு செய்துள்ளார்.

கிழார் வேந்தரின் அன்பிற்குரியவராய் இருந்தனர். சிறுகுடி கிழான் பண்ணன் சோழன் கிள்ளிவளவனின் அன்பிற்கு உரியவன் அவனைப்,

***"பசிப்பிணி மருத்துவன்"*** (புறநானூறு, 173)

*என்கிறான் சோழன்.*

ISSN NO.2581-5938
மலர்-2, இதழ்-1, சனவரி 2019

***"விறகொய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்***
***தலைப்பா டன்றவன் ஈகை "*** (புறநானூறு, 70)

இங்கு ஒரு கிழாரின் கொடைத்தன்மையை இன்னொரு கிழார் (அதாவது பண்ணனின் பெருமையைக் கோவூர்கிழார்) சோழன் கிள்ளிவளவன் அருகிருந்து பாடத் துணியும் உறவுநிலை நோக்கத்தக்கது.

கிழார் வேளிருடனும் நெருங்கி வாழ்ந்தமையை குன்றூர் கிழார் மகனாரின் புறநானூறு, 338ஆம் பாடல் மூலமும் அறியமுடிகின்றது. மூவேந்தரும் போர் மேற்கொண்டு வரினும் தம்மைப் பணிந்து பெண் கேட்க வேண்டும் என்று எதிர்பார்த்ததாகப் பாடி நெடுவேள் ஆதனின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டி உள்ளார். இந்த நெருக்கத்தின் காரணம் அவர் நெடுவேள் ஆதனுக்காக உழுத உழவரின் தலைவன் என ஆய்ந்தறிய முடிகின்றது.

**கிழார், வேளிரைச் சுட்டி அழைக்கும் முறை**

வேளிரை அவரது குடிப்பெயரோடு இணைத்தே சுட்டும் வழக்கம் சங்க இலக்கியம் எங்கும் காணமுடிகின்றது. இதனை, வேள் பாரி, வேள் எவ்வி, வேள் ஆய், வேள் ஆவிக்கோ போன்ற பெயர்கள் தெளிவுறுத்துகின்றன. சங்க இலக்கியம் கிழார்களைச் சுட்டும் பொழுதெல்லாம் அவர்கள் சார்ந்த ஊர்ப் பெயருடன் சேர்த்தே .அழைக்கிறது. இதனைக் கோவூர் கிழார், ஆவூர்மூலங்கிழார், மாங்குடி கிழார், ஆலத்தூர் கிழார் போன்ற பெயர்ச்சான்றுகள் புலப்படுத்துகின்றன.

**நிறைவுரை**

சங்க இலக்கியம் வேளிரைச் சுட்டும் போதெல்லாம் அவர்கள் விளைவித்த நெல் அல்லது நெல்லோடு தொடர்புடையவற்றுடன் சேர்த்தே பேசுகிறது. கிழாரைப் பாடும்போது அவரது தோட்டமும், நெல்லுக்கு மாறான புல்லின் வளமும், அதை ஈவதும் சுட்டப்படுகின்றன. வேளிர் தமிழகம் போந்து ஆட்சி செய்த வேளாளர்; கிழார் வயலில் இறங்கி உழும் உழவர் வாழும் சிறுகுடிகளின் தலைவர் என அறிய ஆய்வு இடமளிக்கின்றது. வேளிர் ஒரெயில் கொண்ட குறுநில மன்னர்; கிழார் நெருங்கிய குறிய பல குறும்புகளில் வாழ்ந்தவர். வேளிரின் நெல்வளத்தை அழித்தே வேந்தர் தம் ஆட்சியைத் தமிழகத்தில் நிலைநாட்டினர். இதனால் வேளிர் அஞ்சிப் பணிந்து திறை செலுத்தினர்; சிலர் தம் செல்வத்தைப் பதுக்கி வைத்தனர்; மகட்கொடை மறுத்தனர். கிழார் வேந்தரின் அன்பிற்கு உரியவராய் இருந்தனர். அத்துடன் வேளிருடனும் நெருங்கிய தொடர்பு அவருக்கு இருந்தது. வேளிரை அவரது குடிப்பெயரோடு இணைத்தே சுட்ட; கிழாரை அவர்கள் சார்ந்த ஊர்ப் பெயருடன் சேர்த்தே அழைத்தனர். கிழார் தமிழ்மண்ணின் மருதத்திணை மாந்தர் என்பது புலனாகின்றது.

## TWO GROUPS OF ANCIENT TAMIL VELALARS

**S. Kanmani Ganesan**

The Tamil society in the ancient Taminad was unique in its multiplicity. The early Dravidologist Dr.Andree F. Sjoberg had mentioned that the Dravidian entity in South India was an amalgam of divergent peoples and cultures. There are evidences in the eight anthologies and the ten idylls for the above statement. The *velalars* who belong to the fourth varna are distinguished clearly by their paddy cultivation. Besides they were not indulged in the manual work of cultivation. They ruled their farming lands as *oreyil mannar* and got the work done by the *uzhavars* (farmers) who were the natives of the tamil land. There were the *kizhars* who were the heads of the *sirukud*i where the farmers dwell. In fact *kizhars* cultivated the cereals and millets before the arrival of *velirs*. Thus the tamil society had two types of *velalars*; one the *velirs* and the other the native people of the Tamil land. Like *velirs* and *venthar; kizhars* were also generous and magnanimous in serving the poor and artisans. These facts are made clear with proper evidences from the Sangam Literature.